

We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## மார்ச் - 2020

We Are Here..!! To Guide You..!!



# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## மார்ச் - 18.03.2020

Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- சர்வதேச நிகழ்வுகள்
- அறிவியல் நிகழ்வுகள்
- நியமனங்கள்








# தமிழக நிகழ்வுகள்

- **தென்காசி மாவட்டத்தில் ரூ.2.70 கோடி** செலவில் **வெள்ளாட்டு இன ஆராய்ச்சி மையம்** ஏற்படுத்தப்படும் என்று கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் **உடுமலை கே.ராதாகிருஷ்ணன் அறிவித்தார்**
  - கன்னியாகுமரி ராமநாதபுரம், கடலூர் மீனவக் கிராமங்களில் மீன் இறங்குதளங்கள் அமைக்கப்படும் என்று மீன்வளத்துறை அமைச்சர் அறிவித்துள்ளார்.
  - கன்னியாகுமரியில் மிடாலம் கிராமத்திலும், ராமநாதபுரம் கீழ்முந்தலிலும், மற்றும் கடலூர் தாழங்குடா கிராமத்திலும் அமைக்கப்படும்.
  - மீன்வளத்துறை அமைச்சர் - டி.ஜெயக்குமார்

# தேசிய நிகழ்வுகள்

- அனைத்துப் பிரிவுகளிலும் **உள்ளூர் மக்களுக்கு** (கன்னட மொழி பேசும்) **வேலைவாய்ப்புகளில் 80% இடஒதுக்கீடு** வழங்குமாறு **கர்நாடக அரசு தனியார் நிறுவனங்களுக்கு அறிவுரை** வழங்கியுள்ளது.
  - தனியார் துறையில் தொகுதி 'சி' மற்றும் தொகுதி 'டி' ஆகிய பணிகளில் உள்ளூர் மக்களுக்கு 100% ஒதுக்கீடு வழங்குவதற்காக 1961ஆம் ஆண்டு கர்நாடகத் தொழில்துறை

வேலைவாய்ப்பு (நிலையான ஆணைகள்) விதிகளை அம்மாநில அரசு ஏற்கனவே திருத்தியுள்ளது.

## சர்வதேச நிகழ்வுகள்

- **கொரோனா வைரஸ்** பாதிப்பை **எதிர்த்துச் சமாளிப்பதற்கு** ஒரு உத்தியை வகுப்பதற்காக **சார்க் அமைப்பின் தலைவர்கள் காணொளி மாநாடு** ஒன்றில் பங்கேற்றனர்
    - இந்த மாநாட்டில் **இந்தியாவின் சார்பாக பிரதமர் மோடி கலந்து கொண்டார்.**
    - இந்த மாநாட்டில் கோவிட் -19 பாதிப்பிற்கான அவசரகால நிதியை உருவாக்க இந்தியா முன்மொழிந்துள்ளது.
    - மேலும் இந்த வைரஸ் நோய்க் கடத்திகளைச் சிறப்பான முறையில் கண்காணிப்பதற்காக இந்தியா நோய் கண்காணிப்பு இணைய வாயிலை அமைக்க உள்ளது.
    - **'நோயை எதிர்த்துப் போராட தயாராகு, அச்சம் அடையத் தேவையில்லை'** என்ற உத்தியுடன் இந்தியா கொரோனா வைரஸ் பாதிப்பை எதிர்த்துப் போராடுகின்றது.

## அறிவியல் நிகழ்வுகள்

- **COVID-19 வைரஸின் மரபுக்கூற்றைப் பிரித்தெடுத்த உலகின் ஐந்தாவது நாடாக இந்தியா** உருவெடுத்துள்ளது.
    - இதற்கு முன்பு ஜப்பான், தாய்லாந்து, அமெரிக்கா மற்றும்

சீனா ஆகிய நாடுகள் கொரோனா வைரஸின் மரபுக்கூற்றை வெற்றிகரமாகப் பிரித்தெடுத்துள்ளன.

- இது நாட்டில் மருந்துகள், தடுப்பூசிகள் மற்றும் விரைவாக நோய் கண்டறிதல் கருவிகள் ஆகியவற்றின் மேம்பாட்டிற்கு உதவுகின்றது.
- இந்தியாவில் பிரித்தெடுக்கப்பட்ட கொரோனா வைரஸின் மரபுக்கூறானது வுஹான் நகரில் இருந்த கொரோனா வைரஸின் **மரபுக்கூறுடன் ஒப்பிடும் பொழுது 99.99% ஒத்தவையாக உள்ளது** என்று இந்திய மருத்துவ ஆராய்ச்சி மன்றத்தின் (Indian Council of Medical Research – ICMR) பொது இயக்குநரான **பல்ராம் பார்கவா** கூறியுள்ளார்.

## நியமனங்கள்

- **ஈராக் புதிய பிரதமராக** நஜ.ஃப் நகரின் முன்னாள் ஆளுநர் **அட்னான் ஸுர்.ஃபியை** அதிபர் பர்ஹம் சலே நியமித்துள்ளார்.
  - அந்தப் பதவிக்கு ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த முகமது அல்லாவியால் கெடு தேதிக்குள் அமைச்சரவை அமைக்க முடியவில்லை. அதனைத் தொடர்ந்து அட்னான் ஸுர்.ஃபியை புதிய பிரதமராக **அதிபர் தேர்ந்தெடுத்துள்ளார்.**
  - **செய்தி துளிகள்**
    - ஈராக் நாணயம் - ஈராக்கிய தினார்
    - ஈராக் தலைநகரம் - பாக்தாத்
    - ஆட்சி மொழிகள் - அரபு, குர்தி

# திருக்குறள்

**குறள் எண் 141**

குறள் பால்: அறத்துப்பால்

குறள் இயல் : இல்லறவியல்

குறள் அதிகாரம்: பிறனில் விழையாமை

**பிறன்பொருளாள் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்து**

**அறம்பொருள் கண்டார்கண் இல்**

**விளக்கம்:** பிறனுடைய பொருளாயுள்ள மனைவியை விரும்பி நடக்கும் அறியாமை, உலகத்தில் அறம், பொருள் ஆகியவற்றின் புகழ் அறிந்தவர்களிடத்தில் இல்லை.

We Shine Academy TM